وَلَآ اَنْتُمْ عٰبِدُوْنَ مَآ اَعْبُدُ ۝۳ وَلَآ اَنَا عَابِدٌ مَّا عَبَدْتُّمْ ۝۴ وَ
لَآ اَنْتُمْ عٰبِدُوْنَ مَآ اَعْبُدُ ۝۵ لَكُمْ دِيْنُكُمْ وَلِيَ دِيْنِ ۝۶ ع ۱ ۲ ۲۴

سُوْرَةُ النَّصْرِ مَدَنِيَّةٌ وَّهِيَ ثَلٰثُ اٰيٰتٍ ۱۱۰

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ ۝

اِذَا جَآءَ نَصْرُ اللّٰهِ وَالْفَتْحُ ۝۱ وَرَاَيْتَ النَّاسَ يَدْخُلُوْنَ فِيْ دِيْنِ
اللّٰهِ اَفْوَاجًا ۝۲ فَسَبِّحْ بِحَمْدِ رَبِّكَ وَاسْتَغْفِرْهُ ۚ اِنَّهٗ كَانَ تَوَّابًا ۝۳ ع ۱۱ ۳ ۳۵ وقف النبی صلی اللّٰہ علیہ وسلم

سُوْرَةُ تَبَّتْ مَكِّيَّةٌ وَّهِيَ خَمْسُ اٰيٰتٍ

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ ۝

تَبَّتْ يَدَآ اَبِيْ لَهَبٍ وَّتَبَّ ۝۱ مَآ اَغْنٰى عَنْهُ مَالُهٗ وَمَا
كَسَبَ ۝۲ سَيَصْلٰى نَارًا ذَاتَ لَهَبٍ ۝۳ وَّامْرَاَتُهٗ ۭ حَمَّالَةَ
الْحَطَبِ ۝۴ فِيْ جِيْدِهَا حَبْلٌ مِّنْ مَّسَدٍ ۝۵ ع ۱ ۵ ۳۶

سُوْرَةُ الْاِخْلَاصِ مَكِّيَّةٌ وَّهِيَ اَرْبَعُ اٰيٰتٍ

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ ۝

قُلْ هُوَ اللّٰهُ اَحَدٌ ۝۱ اَللّٰهُ الصَّمَدُ ۝۲ لَمْ يَلِدْ ڏ وَلَمْ
يُوْلَدْ ۝۳ وَلَمْ يَكُنْ لَّهٗ كُفُوًا اَحَدٌ ۝۴ ع ۱ ۳ ۳۷

3. மேலும், நான் வணங்குகிற(ஒரு)வனை நீங்கள் வணங்குகிறவர்களல்லர்.
4. நீங்கள் வணங்குபவற்றை நான் வணங்குபவனுமல்லன்.
5. மேலும் நான் வணங்குபவனை நீங்களும் வணங்குபவர்களல்லர்.
6. உங்களுக்கு உங்களது மார்க்கம்; எனக்கு என்னுடைய மார்க்கம்.

---

அத்தியாயம் : 110

## அந்நஸ்ர் _ உதவி

வசனங்கள் : 3 மதனீ ருகூஃ : 1

---

அளவற்ற அருளாளன், நிகரற்ற அன்புடையோன்
அல்லாஹ்வின் பெயரால் (ஓதுகிறேன்).

1. (நபியே! உமக்கு) அல்லாஹ்வுடைய உதவி மற்றும் (மக்காவின்) வெற்றி வரும்போது_
2. இன்னும், மனிதர்களை _அல்லாஹ்வுடைய மார்க்கத்தில் கூட்டங் கூட்டமாக பிரவேசிப்பவர்களாக(நபியே) நீர் காணும்போது_
3. அப்போது,(அதற்கு நன்றி செலுத்தும் பொருட்டு) உமதிரட்சகனின் புகழைக் கொண்டு துதி செய்வீராக! மேலும், அவனிடம் பிழை பொறுக்கத் தேடுவீராக! நிச்சயமாக அவன் தவ்பாவை (பாவமன்னிப்புக்கோருதலை) மிகவும் ஏற்றுக்கொள்பவனாக இருக்கிறான்.

---

அத்தியாயம் : 111

## தப்பத் _ நாசமடைந்துவிட்டது

வசனங்கள் : 5 மக்கீ ருகூஃ : 1

---

அளவற்ற அருளாளன், நிகரற்ற அன்புடையோன்
அல்லாஹ்வின் பெயரால் (ஓதுகிறேன்).

1. அபூலஹபின் இரு கைகள் நாசமடைக! அவனும் நாசமாவானாக!
2. அவனுடைய செல்வமும், அவன் சம்பாதித்தவையும் அவனுக்குப் பயனளிக்கவில்லை.
3. மறுமையில் கொழுந்து விட்டெரியும் நெருப்பில் அவன் பிரவேசிப்பான்.
4. விறகு சுமப்பவளான அவனுடைய மனைவியும்(_அந்நரகில் நுழைவாள்).
5. அவளுடைய கழுத்தில் முறுக்கேறிய ஈச்சங்கயிறு ஒன்று இருக்கும்; (அதனால் அவளும் அழிவாள்).

---

அத்தியாயம் : 112

## அல் இக்லாஸ் _ ஏகத்துவம்

வசனங்கள் : 4 மக்கீ ருகூஃ : 1

---

அளவற்ற அருளாளன், நிகரற்ற அன்புடையோன்
அல்லாஹ்வின் பெயரால் (ஓதுகிறேன்).

1. (நபியே!) நீர் கூறுவீராக: அவன்_"அல்லாஹ்" ஒருவனே!
2. அல்லாஹ் (யாவற்றைவிட்டும்) தேவையற்றவன் (யாவும் அவன் அருளையே எதிர்பார்த்திருக்கின்றன).
3. அவன் (எவரையும்) பெறவில்லை; (எவராலும்) அவன் பெறப்படவுமில்லை.
4. மேலும், அவனுக்கு நிகராக எவருமில்லை.